<u>**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**</u>

| | | |
|---|---|---|
| **MCOP No. 338/2024** | **நாள் – 27.03.2026** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | தந்தை பெயர் | திரு. மருதமுத்து |
| ஊர் | புளியஞ்சேரி | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | இல்லை | வயது | 33/2026 |

<u>**முதல் விசாரணை**:</u>

நான் அசல் மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

1. 27.06.2024 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1

2. 28.06.2024 தேதியிட்ட சாட்சி வாக்குமூலம் பதிவிறக்க நகல் ம.சா.ஆ.2 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

3. 28.06.2024 தேதியிட்ட 1 ம் மனுதாரரின் வாக்குமூலம் பதிவிறக்க நகல் ம.சா.ஆ.3ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

4. 12.07.2024 ம் தேதியிட்ட மருதமுத்துவின் இறப்பு சான்றின் பதிவிறக்க நகல் ம.சா.ஆ.4

5. 20.08.2024 ம் தேதியிட்ட இறந்த மருதமுத்து சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.5

6. 19.07.2024 ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.6

7. 30.06.2024 ம் தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.7

8. 23.07.2024 ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழ் பதிவிறக்க நகல் ம.சா.ஆ.8

9. 27.06.2024 ம் தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.9

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

நான் ஜீவனத்திற்கு என்ன செய்கிறேன் என்றால் என்னுடைய தாய்மாமா என்னை பார்த்துக் கொள்கிறார். எனக்கு என்ன வயது என்றால் 33. நான் என்ன வேலை செய்தேன் என்றால் எனது தந்தையுடன் செங்கல் சூளையில் அவருக்கு உதவி செய்தேன். என் தந்தை இறந்த பிறகு நான் செங்கல் சூளை தொழிலை செய்து வருகிறேனா என்றால் என் தந்தை இறந்த பிறகு செங்கல் இருக்கும் வரை அந்த தொழிலை செய்தேன். பின்பு பண தட்டுப்பாட்டால் அந்த தொழிலை செய்ய இயலவில்லை. நான் 10 ம் வகுப்பு முடித்த பிறகு என் தந்தையுடன் வேலை செய்தேன் என்று சொல்லும் பட்சத்தில் சுமார் 18 ஆண்டுகள் அந்த தொழிலை நான் செய்தேன் என்றால் சரிதான். அவ்வாறு அந்த தொழிலை பல ஆண்டுகள் செய்திருக்கும் பட்சத்தில் அந்த தொழில் எனக்கு நன்கு பரிட்சியம் என்றால் சரிதான். 3 ம் மனுதாரரான எனது தம்பி கார்த்திக் அந்த தொழிலை செய்து வருகிறாரா

என்றால் அவர் படித்து வேறு வேலைக்கு சென்று அவரது குடும்பத்துடன் தனியாக வசித்து வருகிறார். என் தம்பி எப்போதிருந்து தனியாக வசித்து வருகிறார் என்றால் எனது தந்தை இறந்த பிறகு திருமணம் செய்துகொண்டு தனியாக சென்றுவிட்டார். அவர் வேலை செய்து கொண்டு தனியாக தனது குடும்பத்தை பார்த்துக்கொள்கிறார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளதா என்றால் இரண்டு குழந்தைகள் உள்ளது. எனது தாயார் என்னுடன் வசித்து வருகிறார். குடும்பத் தலைவர் என்ற முறையில் நான் வருமானம் ஈட்டி எனது குடும்பத்தை கவனிக்க வேண்டும் என்பது உலக பழக்கம் என்றால் சரிதான். நான் திருமணம் செய்து கொள்ளும்போது எனது மனைவியையும் பிறக்கும் குழந்தைகளையும் பராமரிக்க வேண்டுமென்றுதான் திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் ஆரோக்கியமாக உள்ளேன் என்றாலும் எவ்வித வியாதி இல்லை என்றாலும் சரிதான். வேறு வேலைக்கு சென்று வருமானம் ஈட்டி எனது குடும்பத்தை காப்பாற்ற முடியும் என்றால் சரிதான். 4 ம் மனுதாரர் யார் என்றால் எனது பாட்டி. அவர் இறந்துவிட்டார். 1 ம் மனுதாரர் எனது தாயார் ஆவார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை எனது தாயார் அவரை சார்ந்திருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பிறகு நானும் எனது தம்பியும் வேலைக்கு சென்று தனியாக வருமானம் ஈட்ட முடியும் என்றால் சரிதான். எனது தாயாரால் வேலைக்கு செல்ல முடியாதா என்றால் அவருக்கு வேலைக்கு செல்ல முடியாது. நான் வசிக்கும் வீடு எனக்கு சொந்தமானதா என்றால் எனது தகப்பனாருக்கு சொந்தமானதாகும். எனது தாயாரை நான் பராமரித்து வருகிறேனா என்றால் ஆமாம். எனது தந்தை இறக்கும்போது அவர் வயது என்னவென்றால் 54 வயதாகும். எனக்கும்

எனது தந்தைக்கும் சுமார் 20 வயதுதான் வித்தியாசம். விபத்து நடந்த தேதி என்னவென்றால் 26.06.2024. விபத்து நடந்த இடம் கும்பகோணம் – கொட்டையூர் பைபாஸ் சாலை என்றால் சரிதான். தற்போது அந்த சாலை புதியதாக போடப்பட்டுள்ளது. விபத்து நடந்த சமயத்தில் சாலையில் செல்லும் வழி தனியாகவும், வரும் வழி தனியாகவும் இருந்தது என்றால் சரிதான். ஆனால் ஒருபுறம் சாலை வேலை நடந்துகொண்டிருந்ததால் மற்றொருபுறம் சாலை வழியாகத்தான் வாகனங்கள் சென்று வந்து கொண்டிருந்தன. எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. எனது தகப்பனார் சென்ற வாகனத்திற்கு காப்பீடு பாலிசி விபத்து சமயத்தில் இல்லை என்றால் சரிதான். எனது தந்தையின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எனது தந்தை சாலையில் சென்றபோது அவரின் வாகனமும் எதிரே வந்த வாகனமும் ஒன்றுக்கொன்று நேராக மோதிக் கொண்டன என்றால் பக்கவாட்டில் மோதிவிட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எவ்வாறு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது எதிரே 1 ம் மனுதாரருக்கு சொந்தமான வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து மோதி விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்து குறித்து யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது என்றால் எனது தாயார் புகார் கொடுத்தார். விபத்து குறித்து எனது தாயாரும் நானும் கேட்டுத் தெரிந்து கொண்டோம். விபத்து நடந்து முக்கால் மணி நேரம் கழித்து 1 ம் எதிர்மனுதாரரின் வாகனம் மோதியது குறித்து தெரிந்து கொண்டோம். எனது தாயார் புகார்

கொடுக்கும்போதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போதும் நான் உடன் இருக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயாரிடம் சங்கதிகளை தெளிவாக கூறி புகார் கொடுக்குமாறு சொல்லிருந்தேன் என்றால் சரிதான். அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.9 ல் 1 ம் எதிர்மனுதாரரின் வாகனம் எனது தந்தை சென்ற வாகனத்தின் மீது மோதியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். நானும் எனது தாயாரும் விபத்து நடந்த பிறகு அந்த வாகனத்தை பார்த்தோமா என்றால் நான் வெளியூரில் இருந்ததால் நான் உடனே சென்று பார்க்க முடியவில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் எந்த வாகனம் எந்த வாகனத்தின் மீது மோதியது என்று தெரியாது என்றாலும் யார் மீது தவறு என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு தகவல் தெரிவித்தவர் சொல்லிய சங்கதிகளின் அடிப்படையில் எனக்கு விபத்து பற்றிய விபரங்கள் தெரிய வந்தது. விபத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் பற்றி புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எனது மனுவில் அது பற்றி குறிப்பிட்டுள்ளேன். விபத்து நடந்த சாலை சற்று இறக்கமாக இருந்ததில் எனது தந்தை அலட்சியமாக அதிவேகமாக சென்று 1 ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மோதியது என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களின் ஓட்டுநர் மீது தவறு உள்ளதா என்றால் இல்லை. எனது தந்தை சரியாக வந்திருந்தால் அவரது வாகனத்தை திருப்பி விபத்து நடக்காமல் தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. இருவர் மீதும் தவறு இருப்பதால் தன்பால் கவனமின்மை விதியின் கீழ் இழப்பீட்டு தொகையில் எனது தந்தை

50 சதவீதம் பங்களிக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்து நடந்து எத்தனை நாட்கள் கழித்து எனது தந்தை இறந்தார் என்றால் 4 நாட்கள் கழித்து இறந்தார். எனது தந்தைக்கு தலையில் அடிப்பட்டதால்தான் இறப்பு ஏற்பட்டது என்றால் நான் பார்த்தபோது எனது தந்தையின் கழுத்தின் பின்புறம் காயமும், இடது காலில் எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்தது. எனது தந்தை விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்து இருந்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. எனது தந்தை தலைகவசம் அணிந்திருந்தார் என்று முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக எனது தந்தை வெளியே செல்லும்போது தலைகவசம் அணிந்து செல்வார். எனது தந்தையின் இறப்பிற்கு விபத்து ஒரு காரணம் என்றாலும் வயது முதிர்வு மற்றொரு காரணம் என்றால் சரியல்ல. எனது தந்தையின் இறப்பினால் என் தாயார் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளார் என்றாலும் மற்றவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு மட்டுமே இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.27 18:19:36 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*